**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 29.04.2026**

**அசல் வழக்கு எண். 316/2011**

**<u>வா.சா.1 வ.வி.எண்.36/2026 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். இவ்வழக்கில் நான் ஏற்கனவே வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து என் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. பட்டா எண்.434 க்கு 2.05.2009 ம் தேதியில் வாதியின் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது (எண்ணம் 1) ஐ தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 1429 பசிலி ஆண்டிற்கு சர்வே எண்.426 பி/2 பி2 ஏ மற்றும் 1430 பசிலி ஆண்டிற்கு சர்வே எண்.426 பி/9 ஆகியவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்கின் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. சர்வே எண்.426 பி/2 பி2 ஏ, 426 பி/8 மற்றும் 426 பி/9 ஆகியவற்றிற்கான 'அ' பதிவேடு, அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவற்றை வாதி பொது தகவல் அலுவலர் மற்றும் திருவேங்கடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் கோரியதின் பேரில் அளிக்கப்பட்டது என்பதற்கான கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. வாதியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட மனுவை பொறுத்து 25.11.2016 ம் தேதி வழங்கப்பட்ட பதில் கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. சர்வே எண்.426/பி5 பி, 426/பி6 பி, 426/பி2 பி, 426/பி2 பி2 பி, 426/பி2 பி1 ஏ மற்றும் 426/பி2 பி1 பி ஆகியவற்றிற்கு 10 ஆண்டுகளுக்கான (01.06.2003 முதல் 02.06.2012) கணிணியலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்க

சான்றிதழை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 6ம் பிரதிவாதி கனகராஜ் காரிச்சாத்தான் ஊராட்சி மன்ற தலைவரிடம் கட்டிட அனுமதி பெற கொடுத்த விண்ணப்பத்தின் நகலை (திருநெல்வேலி தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிடப்பட்ட நகல்) தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. சர்வே எண்.426/பி க்கான புல வரைபடத்தின் சான்றிடப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நான் கோரும் பரிகாரம் வழங்கிடப் பிரார்த்திக்கிறேன்.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**